(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 280]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 யூன் 06, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1965/ '11

1.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) காலி மாவட்டத்தின் நாகொட பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மலாமுர கால்வாய்க்கு குறுக்காக பாலமொன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள போதிலும், இது வரை அதன் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணிப்புப் பணிகள் இடையில் நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) பிரதேச மக்களின் போக்குவரத்து வசதிக்காக மேற்படி பாலத்தை துரிதமாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மலாமுர கால்வாயின் குறுக்காக பாலத்தை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், மேற்படி பாலத்தின் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2365/ '12

2.

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1987ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க கமக்காரார் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கமக்காரார் ஓய்வூதியத் திட்டத்திற்கு கமக்காரார் பங்களிப்புச் செய்வதை ஆரம்பித்த வருடம் யாதென்பதையும்;

(ii) தற்போதும் இத்திட்டத்திற்கு கமக்காரார்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஓய்வூதியத்திற்கான பங்களிப்பைப் பெற்ற கமக்காரார்களிடம் இன்றுவரை அறவிடப்பட்டுள்ள மொத்தப் பங்களிப்புத் தொகை யாதென்பதையும்;

(ii) 60 வயதைத் தாண்டி இதுவரை ஓய்வுபெற்றுள்ள கமக்காரார்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஓய்வுபெற்ற கமக்காரர் ஒருவருக்கு மாதாந்தம் செலுத்தப்படும் ஆகக்குறைந்த ஓய்வூதியத் தொகை யாதென்பதையும்;

(iv) 2011 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் செலுத்தப்பட்ட மொத்த ஓய்வூதியத் தொகை யாதென்பதையும்;

(v) கமக்காரர்களுக்கான ஓய்வூதியம் வழங்கல் மாதாந்தம் நடைபெறாவிடின் இதனை அவ்வாறு செயற்படுத்தும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2386/ '12

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்குள் மனித உரிமைகள் மீறப்படல் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எத்தனை முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்பதையும்;

(ii) அவற்றில் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) புலனாய்வு செய்யப்பட உள்ள முறைப்பாடுகள் அதே ஆண்டில் புலனாய்வு செய்யப்படாமைக்கான காரணம் என்ன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட காலப்பகுதிக்குள் மனித உரிமைகள் மீறப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு நிறுவனங்கள் தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இதன்படி ஆகக் கூடிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2819/ '12

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கைக்கு வருகை தருகின்ற விமானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய விமான சேவைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவை நிலையானவையா அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்டவையா என்பதையும்;

(iv) அவை விமானச் சேவை நடவடிக்கைகளுக்காக ஆறாவது சுயாதீனப் போக்குவரத்து அனுமதியை (sixth freedom traffic), அதாவது வேறு இரண்டு நாடுகளுக்கிடையே சேவை வழங்கும் போது தமது நாட்டிலும் தரித்து நின்று மீண்டும் பறக்கின்ற அனுமதியை, பெற்றுள்ளனவா என்பதையும்;

(v) இச்சகல விமான சேவைகளினாலும் ஒரு மாதத்திற்கு போக்குவரத்துசெய்யக்கூடிய மொத்தப் பயணிகளையும்;

(vi) கடந்த வருடத்தில் உல்லாசப் பயணிகளின் மொத்த வருகைகள் யாதென்பதையும்;

(vii) உல்லாசப் பயணிகளின் வருகையின் இலக்கினை அடைவதற்கு இவ்விமானச் சேவைகள் எவ்வாறு உதவும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3046/ '12

5.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலிருந்து கொழும்பு மாநகரசபைக்கு அறவிடப்பட வேண்டியுள்ள சுமார் ரூபா. 150 கோடி வரிப்பணக் கட்டணத்தை மேற்படி நிறுவனங்களிலிருந்து அறவிட முடியாதுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளிலிருந்து கொழும்பு மாநகரசபைக்கு அறவிடப்பட வேண்டியுள்ள வரிப்பணக் கட்டணம் தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) குறித்த வரிப்பணக் கட்டணத்தை அறவிடுவதற்கு மாநகர திறைசேரி இற்றை வரை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து மேற்படி வரிப்பணக் கட்டணத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3074/ '12

6.

கௌரவ அஜித் பி. பெரேரா,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி (LLB) பட்டப்படிப்பு பாடநெறிக்கென மாணவர்களைத் தெரிவுசெய்வதற்காக நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கு 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2009, 2010 மற்றும் 2011 ஆகிய ஒவ்வோராண்டிலும் பரீட்சை நடாத்தப்பட்ட திகதி மற்றும் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் "தொலைநோக்கு கூற்றினுள்" உள்ளடக்கப்பட்டுள்ள "வினைத்திறனுடன்" மேற்கூறப்பட்டுள்ள நிலைமை இணங்குகின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3291/ '12

7.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் முதல் இற்றைவரை பதிவு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நிறுவனங்கள் தொடர்பான ஓர் பட்டியலை சமர்ப்பிப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) போலியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் தற்போதுகூட பணியாளர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், குறித்த நிறுவனங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(iii) 2012 ஆம் ஆண்டினுள் சுற்றிவளைக்கப்பட்ட போலியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி நிறுவனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் யாவை;

(v) போலியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் ஊடாக அல்லது போலியான தரவுகளை சமர்ப்பிப்பதன் மூலம் பணியாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு முன்னர், இவற்றை இனங்காண்பதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3298/ '12

8.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுதேச மருத்துவக் கல்லூரி அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியை தனியார் நிறுவனமொன்றுக்கு தொழில்முயற்சி நடவடிக்கைகளுக்காக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தனியார் நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனம் குறித்த காணியைக் கோருகின்ற தொழில்முயற்சி நடவடிக்கை யாது என்பதையும்;

(iv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள காணியை மேற்படி தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதாயின், அதற்கு ஏற்புடையதான நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி காணியைக் குறித்த நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கின்ற விலைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சொத்தானது, சுதேச மருத்துவக் கல்லூரிக்கு உரித்தானது என்பதையும்;

(ii) தற்போது சுதேச மருத்துவக் கல்லூரியில் இடவசதிகள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

3337/ '12

9.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் இரட்டைப் பிரசாவுரிமை வழங்குவது தொடர்பான புதிய சட்டங்களைத் தயாரித்து அவற்றை 3 மாதங்களுக்குள் சமர்ப்பிப்பதாக குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் 2012 யூன் மாதமளவில் தெரிவித்துள்ளார் என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி சட்டங்களைத் தயாரித்தல் தொடர்பிலான தற்போதைய நிலைமை யாது என்பதையும்;

(iii) வெளிநாடுகளில் தங்கியுள்ள இலங்கையர்களில் பெருந்தொகையானோர் இந்நாட்டுக்கு வருகைதருவதற்கு எதிர்பார்த்துள்ள போதிலும் இரட்டைப் பிரசாவுரிமையை பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் இவர்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இரட்டைப் பிரசாவுரிமையை பெற்றுக் கொடுத்தல் தொடர்பான புதிய சட்டங்களை அமுல்படுத்துதல் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2456/ '12

10\.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கட்டுவன பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற மித்தெனிய பொதுச் சந்தையைப் பேணிவருவதற்கான புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு சுமார் இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும், இன்றுவரை அது திறந்து வைக்கப்படவில்லை என்பதையும்;

(ii) தற்போது தனியார் காணியொன்றில் குத்தகை அடிப்படையில் மேற்படி சந்தை பேணிவரப்படுகின்றதென்பதையும்;

(iii) ஆகவே, பொது மக்களின் பணம் விரயமாகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மித்தெனிய பொதுச் சந்தையை புதிய இடத்துக்கு கொண்டு செல்வதில் உள்ள தடைகள் யாவையென்பதையும்;

(ii) அவ்வாறான தடைகளை நீக்கி பொதுச் சந்தையைப் பேணிவருவதற்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2562/ '12

11\.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பல்வேறான உள்ளூராட்சி நிறுவனங்களிலும் பணியாற்றுகின்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு மாதாந்தம் கிடைக்கும் சம்பளம் யாதென்பதையும்;

(ii) மேற்படி மக்கள் பிரதிநிதிகளுக்கு போதியளவு சம்பளம் கிடைக்கின்றதா என்பதையும்;

(iii) உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு மக்கள் சேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வழங்கப்படும் வசதிகளும் கொடுப்பனவுகளும் யாவை என்பதையும்;

(iv) போற்றத்தக்க விதத்தில் மக்கள் சேவையினை வழங்குவதற்கு குறித்த வசதிகளும் கொடுப்பனவுகளும் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2794/ '12

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவரது மாதாந்த சம்பளம் 2006ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மாற்றமடைந்துள்ள விதம் யாதென்பதையும்;

(ii) இலங்கை துறைமுக அதிகார சபையின் தற்போதைய தலைவர் மேற்படி பதவிக்கு மேலதிகமாக வகிக்கும் ஏனைய பதவிகள் அல்லது பதவி யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவிகளை அல்லது பதவியை வகிப்பதற்காக மாதாந்தம் அவருக்கு கிடைக்கின்ற சம்பளங்கள், கொடுப்பனவுகள் அல்லது வேறு வசதிகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி பதவி அல்லது பதவிகள் கிடைக்கப்பெற்ற திகதி முதல் இதுவரை அவற்றுக்கு ஏற்புடையதாக கிடைக்கின்ற சம்பளங்கள், கொடுப்பனவுகள் அல்லது வேறு வசதிகள் மாற்றமடைந்துள்ள விதம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2823/ '12

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றுள்ளவாராக தொலைபேசி உரையாடல்களை இடைமறித்துத் தகவல்களை அறிந்து கொள்வது இலங்கையில் சட்டபூர்வமானதா என்பதையும்;

(ii) இவ்வாறு தொலைபேசி உரையாடல்களை இடைமறித்துத் தகவல்களைப் பெறுவது கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியினையும்;

(iv) கடப்பாடுகள் தீவிர நுண்ணாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தொலைத் தொடர்பு நிறுவனங்களின் பெயர்களையும்;

(v) நபரொருவரின் அடிப்படை உரிமையில் தலையிடுகின்றதான தொலைபேசி உரையாடலை இடைமறித்துத் தகவல்களைப் பெறுகின்றமைக்கு அதிகாரமளிக்கக் கூடிய ஆளையும்;

(vi) தொலைபேசி உரையாடல் இடைமறிக்கப்பட்டு தகவல்கள் அறிந்து கொள்ளப்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3047/ '12

14\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு தெற்கு களுபோவில பொது வைத்தியசாலையில் பணியாற்றும் சில சிற்றூழியர்களும் தாதிமாரும், மருத்துவர்களும் நோயாளிகள் தொடர்பில் பரிவுடன் செயலாற்றுவதில்லையென்பதையும்;

(ii) பணியாட்தொகுதியின் மேற்படி இயல்பு காரணமாக இவ்வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளும் ஏனைய நோயாளிகளும் பெரும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(iii) உரியவாறு சிகிச்சை கிடைக்காததனால் சில நோயாளிகள் மேற்படி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) பொறுப்பின்றி செயற்படும் மேற்படி வைத்தியசாலையின் பணியாட்தொகுதியினர் தொடர்பாக ஆராய்ந்து அது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3075/ '12

15\.

கௌரவ அஜித் பி. பெரேரா,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்த சுகாதார சிறப்புப் பட்ட கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) மேற்படி கற்கை நெறிக்கென இன்றுவரை பதிவு செய்து மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வோராண்டிற்கும் அமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி கற்கை நெறியை கற்று பட்டம் பெற்றுள்ள எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இணைந்த சுகாதார சிறப்புப் பட்ட கற்கை நெறியின் கற்கைக் காலத்தை 03 ஆண்டுகள் வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி பட்டப் படிப்பின் தரத்தினை உறுதிசெய்வதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி அமைச்சர்,— தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்),— 1980 ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் குறித்த சில தேவைப்பாடுகளிலிருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களுக்கு விலக்களிப்பதற்கு விசேட ஏற்பாட்டைச் செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— இன்றைய தினம் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பாக கீழ்க்காணும் ஏற்பாடுகள் தொழிற்படுமாக,—

(அ) இன்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்ட "தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்" இன் இரண்டாம் மதிப்பீடு இன்று நடாத்தப்படுமாக.

(ஆ) இக்கட்டளை பொருந்தும் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு முடிவடைந்ததும் அவை முழுப் பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக.

3.

கௌரவ பொன். செல்வராசா,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

4.

கௌரவ திலிப் வெதஆராச்சி,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"கலாசாரம் மற்றும் பண்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கை கலாசார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ விதுற விக்கிரமநாயக்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஸ்ரீ சித்தார்த்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட தற்பொழுதைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரவு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15 ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02 ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

11.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

15.

போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

17.

இலங்கைக் கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.